**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 6/2022** **Date:25.11.2025**

**(PW2)- கோபால கிருஷ்ணன்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. இந்த வழக்கில் வாதியின் தகப்பனார் சுப்பையா பிள்ளைக்கு பட்டிகை சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவரது தகப்பனார் வழியில் வந்தது. சுப்பையா பிள்ளையின் வாரிசுளான வாதி மற்றும் அவரது சகோதரர்கள் எப்போது பாக பிரிவினை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எத்தனை நபர்களுக்கிடையே பாகம் ஏற்பட்டது என்றால் 5 நபர்களுக்கிடையே பாகம் ஏற்பட்டது . பாக பிரிவினைப்படி யார் யாருக்கு எந்த சொத்துகள் ஒதுக்கப்பட்டது என்றால் முருகனுக்கு 2.75 சென்ட், ராஜேந்திரனுக்கு 3.75 சென்ட், முருகனுக்கு 2.50 சென்ட் என்று பாகம் ஏற்பட்டது.

2. முருகனுக்கு ஒதுக்கப்பட்ட 2.75 சென்ட் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகமில்லை. மற்றொரு முருகனுக்கு ஒதுக்கப்பட்ட 2.50 சென்ட் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகள் அமைந்துள்ள சர்வே எண் என்ன என்றால் ஞாபகமில்லை. பாக பிரிவினைக்கு பிறகு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் கிழக்கு பக்கம் ரோடு உள்ளது என்றால் சரிதான். அதே போல் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் கிழக்கு பக்கம் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

3. இரண்டு நபர்களின் சொத்திற்கும் கிழக்குபக்கம் ரோடு உள்ளதால் தனியாக பாதை அமைக்க வேண்டிய அவசியமில்லையென்றால் சரியல்ல. பாக பிரிவினை பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின் அடிப்படையில் அவரவர் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதியும் பிரதிவாதியும் வாய் மொழியாக ஒப்பந்தம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன், எந்த தேதியில் செய்து கொண்டார்கள் என்றால் ஞாபகமில்லை. மேற்படி வாய் மொழியாக ஒப்பந்தம்

சம்பந்தமாக எழுத்து பூர்வமாக எந்த ஆவணமும் எழுதவில்லையென்றால் சரியல்ல, எழுதியுள்ளார்கள்.

4. அவ்வாறு எழுதப்பட்ட ஒப்பந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் வாய்மொழி ஒப்பந்தம் எவ்வளவு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றால் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது. பிரதிவாதி தனக்கு உரிமைப்பட்ட இடத்தில் தான் அவரது வாகனத்தை நிறுத்துகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாகனத்தை நிறுத்தும் இடம் பாக பிரிவினைப்படி பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல. வாதி எப்போது சொத்து சம்பந்தமான வில்லங்கம் பார்த்தார் என்றால் ஞாபகமில்லை.

5. வாதியோ , பிரதிவாதிகளோ உரிமை மாற்றம் செய்து எந்த ஆவணமும் எழுதவில்லையென்றால் சரியல்ல, வாதி உரிமை மாற்று ஆவணம் எழுதியுள்ளார். நான் குறிப்பிடும் உரிமை மாற்று ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எப்போது நான் குறிப்பிடும் உரிமை மாற்று ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஞாபகமில்லை. நான் குறிப்பிடுவது போல் எந்த உரிமை மாற்று ஆவணமும் ஏற்படுத்தபடவில்லையென்றாலும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சொத்திலோ அல்லது வீட்டின் பின்புறமோ வாதிக்கு எந்த பாதை உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி அவருக்கு கிடைத்த சொத்தை அவரது மகனுக்கு எழுதி கொடுப்பதில் சட்டத்தில் எந்த தடையுமில்லையென்றால் சரிதான். நான் ஆவணங்களுக்கெதிராகவும் , வாதிக்கு வேண்டியும் பொய்யாக சாட்சியமளிப்பதால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல